

# வேளாண்மை – உழவர் நலத்துறை





## மானியக் கோரிக்கை எண்.5

**அறிவிப்புகள்**

**2023 - 2024**

# வேளாண்மை – உழவர் நலத்துறை

## மானியக் கோரிக்கை எண் – 5

## அறிவிப்புகள்
## 2023 - 2024

**எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்**

**வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர்**

# வேளாண்மை – உழவர் நலத்துறை

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, வேளாண்மை – உழவர் நலத்துறையின் சார்பில், 2023-2024ஆம் ஆண்டில் 18 புதிய அறிவிப்புகளை ரூபாய் 111 கோடியே 31 இலட்சம் மதிப்பீட்டில் வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

**எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்**

**வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர்**

1. இடுபொருட்களை இருப்பு வைத்து விவசாயிகளுக்கு வழங்கிட 2023-24ஆம் ஆண்டில் 10 துணை வேளாண்மை விரிவாக்க மையங்களுக்கு புதிய கட்டடம் கட்டுவதற்கு ஐந்து கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும்.

2023-24ஆம் ஆண்டில் தஞ்சாவூர் மாவட்டம் திருச்சிற்றம்பலம், அணைக்கரை, புதுக்கோட்டை மாவட்டம் கீரமங்கலம், ஈரோடு மாவட்டம் பர்கூர், மயிலாடுதுறை மாவட்டம் ஆக்கூர், நாகப்பட்டினம் மாவட்டம் கணபதிபுரம், திருவள்ளூர் மாவட்டம் கிளாம்பாக்கம், திருவாரூர் மாவட்டம் திருக்கண்ணமங்கை, சிவகங்கை மாவட்டம் மல்லாக்கோட்டை, திண்டுக்கல் மாவட்டம் கள்ளிமந்தியம் ஆகிய 10 துணை வேளாண்மை விரிவாக்க மையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு ஐந்து கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும்.

2. வேளாண்மை- உழவர் நலத்துறையின் கீழ், பணியாளர்களின் பணித்திறனை மேம்படுத்திட, அனைத்துத் துறைத் தலைவர்களுக்கும் பணி நிலை மேலாண்மை (Cadre Management) அதிகாரம் வழங்கப்படும்.

தற்போது, அனைத்து பொதுப்பணி, அமைச்சுப் பணி, அடிப்படைப்பணி, ஓட்டுநர் பணிகளுக்கும் வேளாண்மை விற்பனைத் துறையில் வேளாண்மை விரிவாக்கப் பணி, வேளாண் விரிவாக்க சார்புப் பணிகளுக்கும் வேளாண்மை இயக்குநரே பணி நிலை மேலாண்மை அலுவலராக உள்ளார்.

ஒரே துறையில் தொடர்ந்து பணிபுரிந்தால் அலுவலர்களின் அனுபவத்தை முழுமையாக பயன்படுத்திட இயலும் என்பதால், இப்பணிகளுக்கு சம்மந்தப்பட்ட துறைத் தலைவர்களே பணி நிலை மேலாண்மை அலுவலராக செயல்படுவார்கள்.

3. நெல் உற்பத்தியை அதிகரிக்க துத்தநாக சத்தைக் கரைத்துக் கொடுக்கும் திரவ உயிர் உரத்தை இரண்டு இலட்சம் ஏக்கருக்கு 50 சதவிகித மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்குவதற்கு 2023-24ஆம் ஆண்டில் ஒரு கோடியே 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்படும்.

நெல் மகசூலை அதிகரிப்பதில் முக்கிய பங்கு வகிக்கும் துத்தநாக சத்தைக் கரைத்து கொடுக்கும் திரவ உயிர் உரத்தை ஒரு இலட்சம் லிட்டர் உற்பத்தி செய்து, இரண்டு இலட்சம் ஏக்கரிலான நெற்பயிருக்கு 50 சதவிகித மானியத்தில் விநியோகம் செய்வதற்காக 2023-24ஆம் ஆண்டில் ஒரு கோடியே 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும். இதனால் இரண்டு இலட்சம் நெல் விவசாயிகள் பயனடைவார்கள்.

4. கூட்டுறவு, பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் பதிவு செய்த கரும்பு விவசாயிகளுக்கு 50 சதவிகித மானியத்தில் காட்டுப்பன்றி விரட்டி மருந்து (Wild Boar Repellent) 2023-24ஆம் ஆண்டில் 45 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

கரும்பு பயிரில் அதிக சேதம் ஏற்படுத்தும் காட்டுப்பன்றியினைக் கட்டுப்படுத்துவதற்காக, 2023-24ஆம் ஆண்டில், கூட்டுறவு, பொதுத்துறை சர்க்கரை ஆலைகளின் கரும்பு விவசாயிகளுக்கு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் உற்பத்தி செய்யப்படும் காட்டுப்பன்றி விரட்டி மருந்து (Wild Boar Repellent) சுமார் ஐந்தாயிரம் ஏக்கர் பரப்பளவில் 50 சதவிகித மானியத்தில் வழங்குவதற்காக 45 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்படும்.

5. கரும்பு சாகுபடியில் நவீன தொழில்நுட்பங்களை, நேரில் அறிந்து கொள்ளும் வகையில், 2023-24ஆம் ஆண்டில் 100 கரும்பு விவசாயிகளை வெளிமாநிலங்களுக்கு கண்டுணர் சுற்றுலா (Exposure Visit) அழைத்து செல்வதற்கும், 2000 கரும்பு விவசாயிகளுக்கு மாவட்ட அளவில் தொழில்நுட்ப பயிற்சி வழங்குவதற்கும் மொத்தம் 30 இலட்சம் ரூபாய் செலவிடப்படும்.

கரும்பு சாகுபடியில் நவீன தொழில்நுட்பங்கள், அறுவடை இயந்திரங்களின் பயன்பாட்டை நேரில் தெரிந்து கொள்வதற்காக, 2023-24ஆம் ஆண்டில் 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 100 கரும்பு விவசாயிகள் வெளிமாநிலங்களுக்கு கண்டுணர் சுற்றுலா அழைத்துச் செல்லப்படுவதுடன், 2,000 கரும்பு விவசாயிகளுக்கு 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மாவட்ட அளவிலான தொழில்நுட்ப பயிற்சிகளும் அளிக்கப்படும்.

6. கள்ளக்குறிச்சி-2, பெரம்பலூர், செங்கல்ராயன் சர்க்கரை ஆலைகளில் 2023-24ஆம் ஆண்டில் தலா ஒரு புதிய உருளை ஒரு கோடியே 18 இலட்சம் ரூபாய் செலவில் கொள்முதல் செய்யப்படும்.

கரும்பு ஆலைகளின் செயல்திறனை அதிகரிக்கும் நோக்கத்துடன், 2023-24ஆம் ஆண்டில் கள்ளக்குறிச்சி -2, பெரம்பலூர், செங்கல்ராயன் சர்க்கரை ஆலைகளில் தலா ஒரு புதிய உருளை ஒரு கோடியே 18 இலட்சம் ரூபாய் செலவில் கொள்முதல் செய்யப்படும்.

7. திருப்பத்தூர், சேலம், மதுராந்தகம், எம்.ஆர்.கே கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் தலா ஒரு காற்றழுத்த இயந்திரமும் (Air compressor), கள்ளக்குறிச்சி-2, எம்.ஆர்.கே கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் இருவழி மையப்படுத்தப்பட்ட உயவு அமைப்பு (Dual line centralized lubrication system) தலா ஒன்றும் 2023-24ஆம் ஆண்டில் 85 இலட்சம் ரூபாய் செலவில் கொள்முதல் செய்யப்படும்.

2023-24ஆம் ஆண்டில் திருப்பத்தூர், சேலம், மதுராந்தகம், எம்.ஆர்.கே கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் தலா ஒரு காற்றழுத்த இயந்திரமும் (Air compressor), கள்ளக்குறிச்சி-2, எம்.ஆர்.கே கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் இருவழி மையப்படுத்தப்பட்ட உயவு அமைப்பும் (Dual line centralized lubrication system) 85 இலட்சம் ரூபாய் செலவில் கொள்முதல் செய்யப்படும்.

8. மரவள்ளி மகசூலைப் பெருக்க நடவுக்குச்சிகள், உரம், பயிர்ப் பாதுகாப்பு, நடவுக்குச்சி வெட்டும் கருவிகளுக்கு மானியம் வழங்கிட 2023-24ஆம் ஆண்டில் இரண்டு கோடியே ஐந்து இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்படும்.

மரவள்ளியில் சாகுபடி செலவினைக் குறைத்து மகசூலை அதிகரிக்கும் வகையில், உயர் இரக நடவுக்குச்சிகள், நீர்வழி உரமிடல், இயற்கை உரம், இயற்கை பூச்சி, நோய் கட்டுப்பாட்டுக் காரணிகள், நடவுக்குச்சி வெட்டும் கருவிகள் ஆகிய இனங்களுக்கு மானியம் வழங்குவதற்காக 2023-24ஆம் ஆண்டில், இரண்டு கோடியே ஐந்து இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்படும்.

9. தோட்டக்கலைப் பயிர்களில் சந்தை சார்ந்த தொழில்நுட்ப முறைகளை துல்லியமாக செயல்படுத்துவதற்காக 2023-24ஆம் ஆண்டில் தோட்டக்கலை தொழில்நுட்ப அலுவலர்கள் வேளாண் விற்பனை - வேளாண் வணிகத் துறையில் சிறப்புப் பணியமர்த்தப்படுவார்கள்.

தோட்டக்கலை விளைபொருட்களில் அறுவடைக்குப் பின் கையாளுதல், மதிப்புக் கூட்டுதல், சேமித்தல், பதப்படுத்துதல், உள்நாட்டு விற்பனை, ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்காக, தோட்டக்கலை பயிர் சாகுபடியின் போதே, தொழில்நுட்பங்களை துல்லியமாக செயல்படுத்த வேண்டியுள்ளதால், தோட்டக்கலை தொழில்நுட்ப அலுவலர்கள் வேளாண் விற்பனை - வேளாண் வணிகத் துறையில் சிறப்புப் பணியமர்த்தப்படுவார்கள். முதற்கட்டமாக, 2023-24ஆம் ஆண்டில் 11 தோட்டக்கலை உதவி இயக்குநர்கள், ஒரு தோட்டக்கலை அலுவலர், இரண்டு உதவி தோட்டக்கலை அலுவலர்கள் ஆக மொத்தம் 14 தொழில்நுட்ப அலுவலர்கள் வேளாண் விற்பனைத்துறையில் சிறப்புப் பணியமர்த்தப்படுவார்கள்.

**10. தேசிய மின்னணு வேளாண் சந்தை உத்திகள், பண்ணை அளவிலான வர்த்தகம் குறித்து 2023-24ஆம் ஆண்டில் வேளாண்மை, தோட்டக்கலைத்துறை தொழில்நுட்ப அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும்.**

வேளாண்மை, தோட்டக்கலைத் துறையில் பணியாற்றும் தொழில்நுட்ப அலுவலர்களுக்கு 2023-24ஆம் ஆண்டில் வேளாண்மை, தோட்டக்கலை விளைபொருட்களை தேசிய மின்னணு வேளாண் சந்தை (e-NAM) மற்றும் பண்ணை அளவிலான வர்த்தகம் (Farm Gate trading) குறித்த தொழில்நுட்ப பயிற்சிகள் அளிக்கப்படும்.

11. தோட்டக்கலை இடுபொருட்களை உரிய காலத்தில் விவசாயிகளுக்கு வழங்குவதற்காக 2023-24ஆம் ஆண்டில் 20 வட்டாரங்களில் தோட்டக்கலைக் கிடங்குகள் ஒரு கோடி ரூபாய் செலவில் கட்டப்படும்.

தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பளவு அதிகரித்து வரும் நிலையில் விவசாயிகளுக்கு விதைகள், நடவுச்செடிகள், உரங்கள், பூச்சி, நோய் கட்டுப்பாட்டு மருந்துகளை உரிய காலத்தில் வழங்குவதற்காக, வட்டார அளவில் தோட்டக்கலைக் கிடங்குகள் அமைக்கப்படும். முதல் கட்டமாக, 2023-24ஆம் ஆண்டில், 20 வட்டாரங்களில் தோட்டக்கலைக் கிடங்குகள் ஒரு கோடி ரூபாய் செலவில் கட்டப்படும்.

12. திருச்சியில் உள்ள வேளாண்மைப் பொறியியல் பயிற்சி மையத்தினை வலுப்படுத்திட 2023-24ஆம் ஆண்டில் மூன்று கோடியே 48 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

விவசாயிகளுக்கும், வேளாண்மைப் பொறியியல் துறை அலுவலர்களுக்கும், நவீன வேளாண்மைப் பொறியியல் தொழில்நுட்பங்கள் குறித்து விழிப்புணர்வும் பயிற்சியும் அளிப்பதற்காக, திருச்சி மாவட்டத்தில் உள்ள வேளாண்மைப் பொறியியல் பயிற்சி மையத்தினை வலுப்படுத்திடவும், 600 பயிற்சியாளர்களுக்கு பயிற்சிகள் வழங்கிடவும், 2023-24ஆம் ஆண்டில் மூன்று கோடியே 48 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

13. வேளாண்மை இயந்திர வாடகைத் திட்டத்தினை வட்டார அளவில் கொண்டு செல்லும் வகையில், 2023-24 ஆம் ஆண்டில் 15 வேளாண் இயந்திரக் கூடங்கள் இரண்டு கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் வழங்கப்படும் இயந்திர வாடகைத் திட்டத்தினை வட்டார அளவில் செயல்படுத்துவதற்காக. வட்டார ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மைய வளாகங்களில் வேளாண்மை இயந்திரங்களை பாதுகாப்பாக வைக்கவும், பழுதுகளை உடனுக்குடன் நீக்கி முழுமையாக பயன்படுத்திடவும், 2023-24ஆம் ஆண்டில் 15 வேளாண் இயந்திரக் கூடங்கள் மொத்தம் இரண்டு கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

**14. உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்களை சந்தைப்படுத்திட 2023-24ஆம் ஆண்டில் அரசு வணிக வளாகங்களில் சந்தை இணைப்பு வசதிகள் ஏற்படுத்தித்தரப்படும்.**

உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் விளைபொருட்களையும், மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்களையும், பல்வேறு அரசுத் துறை அலுவலகங்களின் சில்லறை விற்பனை நிலையங்கள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் அமுதம் பல்பொருள் சிறப்பு அங்காடிகள், கூட்டுறவு பல்பொருள் அங்காடிகள், மகளிர் திட்டத்தின் பூமாலை வணிக வளாகங்களில் விற்பனை செய்திட 2023-24ஆம் ஆண்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதன் மூலம் விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைப்பதுடன் நுகர்வோருக்கு தரமான உணவுப் பொருட்களும் கிடைக்கும்.

15. கன்னியாகுமரி ஆண்டார்குளம் கத்திரி, விருதுநகர் அதலைக்காய், திண்டிவனம் பனிப்பயறு, கரூர் சேங்கல் துவரை, ஜவ்வாதுமலை சாமை ஆகிய ஐந்து வேளாண் விளைபொருட்களுக்கு புவிசார் குறியீடு பெறுவதற்காக 2023-24ஆம் ஆண்டில் 15 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

2023-24ஆம் ஆண்டு வேளாண் நிதிநிலை அறிக்கையில், 10 வேளாண் விளைபொருட்களுக்கு புவிசார் குறியீடு பெறுவது குறித்த அறிவிப்புக்கு விவசாய பெருமக்களிடம் கிடைத்த வரவேற்பினை தொடர்ந்து, கன்னியாகுமரி ஆண்டார்குளம் கத்திரி, விருதுநகர் அதலைக்காய், திண்டிவனம் பனிப்பயறு, கரூர் சேங்கல் துவரை, ஜவ்வாதுமலை சாமை ஆகிய ஐந்து தனித்துவமான விளைபொருட்களுக்கு புவிசார் குறியீடு பெற 2023-24ஆம் ஆண்டில் 15 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

16. திண்டுக்கல், கிருஷ்ணகிரி, தருமபுரி, பெரம்பலூர், தூத்துக்குடி, விருதுநகர், இராமநாதபுரம் ஆகிய ஏழு மாவட்டங்களில் நீர்வடிப் பகுதி மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்வதற்காக 2023-24 ஆம் ஆண்டில் 78 கோடியே 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

திண்டுக்கல், கிருஷ்ணகிரி, தருமபுரி, பெரம்பலூர், தூத்துக்குடி, விருதுநகர், இராமநாதபுரம் ஆகிய ஏழு மாவட்டங்களில் 275 நீர்வடிப் பகுதிகளில், தடுப்பணைகள், கசிவுநீர் குட்டைகள், அமிழ்வு நீர் குட்டைகள், பண்ணைக் குட்டைகள், ஊருணி தூர்வாருதல், நிலத்தடி நீர் செறிவூட்டும் கட்டமைப்புகள், ஒருங்கிணைந்த பண்ணையம், சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி ஆகிய பணிகளுக்காக 2023-24ஆம் ஆண்டில் 78 கோடியே 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

17. தருமபுரி மாவட்டத்தில் சுனை நீர் வடிப்பகுதி (Springshed) மேம்பாட்டுக்கான திட்டம் ஐந்து ஆண்டுகளில் மொத்தம் 14 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

பருவமழைக்காலத்தில் பெய்யும் மழைநீர், மலைப்பகுதிகளில் உள்ள சுனைகளில் தேங்கி, மலைவாழ் மக்களுக்கும், விலங்குகளுக்கும், வாழ்வாதாரமாக விளங்குகிறது. தமிழ்நாட்டில் மலைப்பகுதிகளில் உள்ள சுனைகள் புத்துயிர் பெறுவதற்கு அரசு உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கும்.

முதற்கட்டமாக, தருமபுரி மாவட்டத்தில் 5,000 எக்டர் பரப்பளவில் பிக்கிலி, சிட்டிலிங்கி மலைப் பகுதியில் உள்ள சுனை நீர்வடிப் பகுதியினை மேம்படுத்துவதற்கான திட்டம், ஐந்து ஆண்டு காலத்தில் மொத்தம் 14 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் ஒன்றிய, மாநில அரசு பங்களிப்புடன் செயல்படுத்தப்படும்.

18. மாநில அளவிலான வேளாண் கண்காட்சி திருச்சியிலும், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், வாழை, மலர்களுக்கான கண்காட்சி சென்னையிலும் பலாவுக்கான கண்காட்சி பண்ருட்டியிலும் நடத்தப்படும்.

நவீன தொழில்நுட்பங்கள், புதிய இரகங்கள், வேளாண் இயந்திரங்கள், மதிப்புக்கூட்டும் தொழில்நுட்பங்கள் குறித்த விழிப்புணர்வினை விவசாயிகள், கல்லூரி மாணவர்கள், பொதுமக்கள், உணவு பதப்படுத்துபவர்கள், ஏற்றுமதியாளர்களிடையே ஏற்படுத்தும் வகையில், 2023-24 ஆம் ஆண்டில் மாநில அளவில் வேளாண் கண்காட்சி திருச்சியிலும், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் (FPO), வாழை, மலர்களுக்கான கண்காட்சி சென்னையிலும், பலாவுக்கான கண்காட்சி பண்ருட்டியிலும் நடத்தப்படும்.

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை - 600 001.